







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி


மலர் 2 இதழ் 10 19.03.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# மெய்ஞானம்

**கூத்தப்பாக்கம் ரகுநாதாச்சாரியார்**

நம்மை பெருமானோடு இணைத்துக்கொள்ள நாம் மெய் ஞானம் பெற வேண்டும். மெய்ஞானமாவது:-

a. பெருமானே நம்மைப் படைத்தவன்

b. நாம் என்பது நம்முடைய சரீரம் அல்ல, நம்முடைய ஆத்மாவே.

c. நாம் என்னும் ஆத்மாவுக்கு சட்டையே நம்முடைய இந்த சரீரம்

d. தாய் தந்தையர் நமக்கு கல்வியறிவு அளித்து சுதந்திரமாக வெளியுலகில் வாழ அனுமதி அளிப்பது போல், நாம் என்கிற நம் ஆத்மாவை இவ் வுலகத்துக்கு அனுப்பி, நமக்கு ஓர் சரீரத்தையும் தந்து, நாம் நம் வாழ்க்கையை நடத்திச்செல்ல சுதந்திரமும் தந்துள்ளான் எம்பெருமான்.

e. அவன் நமக்களித்துள்ள இந்த சுதந்திரத்தை நல் வழியில் பயன் படுத்த வேண்டும்.

f. நாம் நல் வழிசெல்ல, வேதங்களின் மூலமாகவும், பகவத் கீதை மூலமாகவும், ஆழ்வார் ஆசார்யர்கள்,
மூலமாகவும், நம்முள் அந்தர்யாமியாக வீற்றிருந்து, மனச் சாட்சி மூலமாகவும், பெருமான் சரியான பாதையை நமக்கு காட்டிக்கொண்டே இருக்கிறான். இவற்றை அறிந்து நல் வழி செல்வது நம் கடமையாகும்.

g. எம்பெருமான் நமக்கு இவ்வளவு செய்தும், நாம் நம் வாழ்வில் துன்புற்றால், அதன் காரணம்

(1) பெருமானிடம் நாம் காட்டும் அலட்சியமே,

(2) பெருமானின் அறிவுரைகளான சாஸ்த்ரங்களைப் புறக்கணிப்பதே.

h. பாதையில் செல்லும்போது, அஜாக்கிரதையாக ஒரு சிறு திருப்பத்தில் திரும்பினாலும் அது வேறு எங்கோ நம்மைக் கொண்டு சேர்ப்பதுபோல், நாம் சிறு தவறு செய்தாலும், அது நம்மை வேறு எங்கோ கொண்டு சேர்த்து, நம்மை அவதிக்கு உள்ளாக்கும். மிகவும் பாதிக்கும்.

i. ஆகவே, பெருமான் காட்டும் நல்வழியில் அதாவது அவன் தந்த சாஸ்த்ரங்கள் காட்டும் நல்வழியில் நம் வாழ்க்கையை அமைத்துகொள்வதே மெய் ஞானம்.

| இன்றைய ஸாம்யவாதி | கீதையின் ஸாம்யவாதி |
|---|---|
| 1. பகவானுக்கு விரோதமானவர். | 1. எங்கும் பகவானைப் பார்ப்பவர். |
| 2. தர்மத்தை அழிப்பவர். | 2. ஒவ்வொரு நிலையிலும் தர்மத்தைப் பேணுபவர். |
| 3. ஹிம்ஸையே உருவானவர். | 3. அஹிம்ஸையின் ஆதர்ச புருஷர். |
| 4. தன்னலவாதி. | 4. தன்னலத்தைத் தன்னிடம் அணுகவே விட மாட்டார். |
| 5. உடைப் பழக்கங்களில் உணவு, வெளிப்படையாக ஸம்பாவனை காட்டிவிட்டு உள்ளத்தில் வேற்றுமை பாராட்டுவார். | 5. உணவு, ஸ்பர்சம் இவற்றில் சாஸ்த்ர முறைப்படி உலகியலில் சில வேற்றுமைகளைப் பாராட்டினா லும் உள்ளத்தில் வேற்றுமை பாராட்டுவதில்லை. மேலும் எங்கும் பரமாத்மாவையே ஸமமாகப் பார்ப்பதற்கு வழி காட்டுகிறார். |
| 6. லக்ஷ்யம் உலகாயதப் பொருளை அடைவதே. | 6.லக்ஷ்யம் பரம்பொருளை அடைவதே. |
| 7. தன் கட்சியில் பிடிப்பும், பிறரைப் பொருட்படுத்தாமையும் உண்டு. | 7. அபிமானமே கிடையாது, எங்கும் பரமாத்மாவையே பார்த்து எல்லோரையும் மதிப்பார். |
| 8. வெளி நடத்தை முக்யம். | 8. உள்ள மனப்பாங்குதான் முக்யம். |
| 9. உலகியல் இன்பத்தில் நாட்டம். | 9. ஆன்மிக ஸுகத்தில் நாட்டம். |
| 10. பிறர் செல்வத்திலும், கொள்கை யிலும், கருத்திலும் பொறாமை. | 10. ஸமமான பரந்த மனப்பான்மை. |
| 11. விருப்பு - வெறுப்பு உண்டு. | 11. எல்லோரிடமும் விருப்பு - வெறுப்பில்லாத ஸமமான நடைமுறை. |

## ஸ்ரீ பாஞ்சராத்ரத்தின் பிருஹத் பிரம்ம சம்ஹிதை - முதல் பாதம்- சில முத்துகள்

மாயையின் செயல்களைச் *அனந்தன், கருடன், விஷ்வக்சேனர் போன்ற நித்ய சூரிகள், ஆதிகாலம் தொட்டே என்னுடன் பிரியாது ஒன்றியிருப்பவர்கள். பிணைப்பற்றவர்கள், எக்காலத்தும் மாறுபாடான செய்யாதவர்கள். எப்போதும் ஒரே திவ்ய ஸ்வரூபத்துடன், எனது திருவடித் தொண்டில் மட்டுமே அசைக்க முடியாத பற்று கொண்டவர்கள். ""எப்போதும் என் திருமுன் நின்று, என் கருணைக் கடலாகிய அமிர்தத்திற்காக உள்ளம் உருகி ஏங்குபவர்கள். நானும் அவர்களும் ஒன்றே; இவர்கள் அனைவரும் எனக்கு நித்திய தொண்டர்கள், இடையறாது தொண்டு செய்யும் நித்திய கைங்கரிய சீலர்கள். இவர்களுக்கு எக்காலத்திலும் ஞானம் குறைவு என்பது கிடையாது; இது சத்திய வாக்கு. ""சிலர், பிரகிருதியின் சேர்க்கையால், ஞானம் சிறிது குன்றி, மாய வலையில் கட்டுண்டு, பின்னர் என் அளப்பரிய கருணையால் மீண்டும் விடுதலை பெற்று, ஆச்சாரியன் திருவடிகளைச் சரணடைந்து, ஞானோபாயத்தை அறிந்து, என் சிரமேற்கொண்டு செய்து, பிராகிருதமான உடலை அடைகிறார்கள்."

ஸம்சார பந்தத்தை அறுத்து முக்தி பெற்றவர்கள் இருவகைப் படுவர். அவர்கள் கேவல முக்தர் என்றும், சேவக முக்தர் என்றும் போற்றப்படுவர். கேவல முக்தர் இவ்வுலக உடலை நீத்தவர்கள். சேவக முக்தர், கிங்கரர்கள் என்றும், ரூப் சேவகர்கள் என்றும் இரு பெரும் பிரிவினராவர். கிங்கரர்கள், நறுமணத் திரவியங்கள், மலர் மாலைகள் சமர்ப்பித்தல், திவ்ய ஆலயத்தைப் பரிவுடன் தூய்மை செய்தல், அலங்கரித்தல் முதலிய திருப்பணிகளைச் செய்பவர்கள். ரூப சேவகர்கள், பேரன்புடன் பரம்பொருளின் திவ்யத் திருவுருவத்தை இமை கொட்டாது தரிசிப்பவர்கள். இத்தகைய முக்தி பெற்ற மஹான்கள் என் உலகத்தில் பிரவேசிக்கிறார்கள். அங்கே எழில்மிகு மலைகள், மாளிகைகள், மண்டபங்கள், அழகிய படிகட்டுகள் மற்றும் தளங்கள், ரத்தின மண்டபங்கள், பொற்றாமரைக் குளங்கள், அன்னம், நீர்க்கோழி முதலான

பறவைகள், சிம்மாசனங்கள், ஆயுதங்கள், வாகனங்கள், ஆபரணங்கள், திருவுருவங்கள் முதலியன உள்ளன. நித்திய முக்தர்களும், கேவல முக்தர்களும், ஆன்மாக்களே; இதில் எள்ளளவும் ஐயமில்லை. அனைவரும், குறைவற்ற பூரண ஞானம் கொண்டவர்கள்; அனைவரும், எல்லா நற்காரியங்களையும் செய்பவர்கள். அனைவரும், ஒப்பற்ற பேரின்பத்தை அடைந்தவர்கள். அனுபவிப்பவர்கள்; அனைவரும், பரமபதத்தை அடைந்தவர்கள்.

தன்னுள் பொங்கிய பேராவலின்படி, என் பேரருளால், பக்தியுடன், தொண்டு செய்யத் தகுதி பெற்று, என் உலகத்தை அடைகிறார்கள். கர்ம யோகிகள், பலவித தேவர்களை வழிபடுபவர்கள், மற்றும் அஷ்டமா சித்திகளை விரும்பும் யோகிகளுக்கும், என் உலகத்தில் இடமில்லை. சிந்து மகளே, என்னை மட்டுமே முழுமனதுடன் சரணடைந்து, பக்தியில் ஆழ்ந்து, கடத்தற்கரிய மாயையைத் தாண்டி, கேவல முக்தர்களாகவோ, சேவக முக்தர்களாகவோ ஆகி, என்னுடைய திருப்பணியால், என் திருவடியை அடைந்தவர்கள் அநேகர். கேவல முக்தர்களோ பிறப்பு இறப்பு எனும் சுழற்சியிலிருந்து முற்றிலுமாக விடுபடுகிறார்கள்.

**www.kriyasagaram.in**

*************************************************************

